# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 7,419 — 1924 ம் ஸ்ரீ புரட்டாதிமீ 26 ந் திகதி வெள்ளிக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் தேவைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ஸ்ரீ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் வலிகாமம் மேற்குப் பகுதியைச்சேர்ந்த ஆனைக்கோட்டையில் ஓர் வாய்க்காலின் போக்கை மாற்றிவிடுவதற்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 6,265. குறிச்சி—ஆனைக்கோட்டை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | ஏகாம்பரத்தார்வளவு .. | குடியிருக்கும் வளவு .. | (1) இராசவாசல் முதலியார் ரி. காராளபிள்ளை, (2) டபிள்யு. பொன்னுத்துரையின் மனைவி சிவகாம சவுந்தரம் | 0 0 7·75 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஸ்ரீ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1924 ம் ஸ்ரீ ஐப்பசி (ஒக்ரோபர்) மாசம் 20 ந் தேதியிலன்று காலமே 11 மணிக்கு யாழ்ப்பாணம் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

யாழ்ப்பாணக் கச்சேரி,
1924 ம் ஸ்ரீ செப்டெம்பர்மீ 3 ந் உ.

எவ். ஜே. ஸ்மித்,
அரசாட்சி ஏசண்டு.

---

### அரசாட்சி திரும்பச் சுதந்தரமாக்கிக்கொள்ளப்படுவதற்கான காணி விளம்பரம்.

மேல்மாகாணத்து களுத்துறை டிஸ்திறிக்கில் பஸ்துன்கோறளை மேற்கில் இத்தகொடபத்தில் நாபொட என்னும் நாட்டில் இருக்கின்றனவும், அரசாட்சிக்குச் சேர்க்கப்பட்டிருப்பதும் 4,087 ம் இலக்கப் பிரதமபடத்தில் 9107 ம் துண்டாகக் காட்டப்பட்டதும் டிக்பெரிகந்தே என்னும் பெயரினால் அழைக்கப்பட்டதும், 8 ஏக்கர் 38 பேர்ச் விஸ்தாரமுள்ளதும், ஓர் வழியை வடக் கெல்லையாகவும், ஓர் வழியையும் 124,479 ம் பிரதமபடத்தில் காட்டிய நிலத்தையும் ஓர் நீரோடையையும் கிழக் கெல்லையாகவும், ஆர். கொஞசவுக்குரிய நிலத்தை தென்கிழக் கெல்லையாகவும், முடிக்குரிய நிலத்தையும் ஆர். கொஞசா என்பவருக்கும் உள்ள நிலத்தையும் தெற் கெல்லையாகவும், முடிக்குரியதென வளங்கப்பட்டுவரும் நிலத்தையும் 124,478 ம் உரிமைப்படத்தில் காட்டப்பட்ட நிலத்தையும் மேற் கெல்லையாகவுங்கொண்ட காணி; முடியால் 1882 ஸ்ரீ ஜுன்மீ 1 ந் உ, கொழும்பில் வசித்த வில்லியம் கேரி. லீச்மன் என்பவருக்கு விற்கப்பட்டு சென்ற எட்டு வருஷங்களுக்கு மேற்பட சொந்தக்காரரினால் கைவிடப்பட்டிருப்பதாகத் தோற்றப்படுகிறபடியாலும், கவனமாகவும் நியாய

மாசவும் விசாரணை செய்தும் அச் சொந்தக்காரரைக் கண்டுபிடிக்கப்படாமையாலும் இதனால் சகலரும் அறியவேண்டியது என்னவென்றால் மேல்மாகாணத்து அரசாட்சி ஏசண்டர் ஆகிய எனக்கு, 1887 ம் ஆண்டின் 4 ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தினால் எனக்குக் கொடுக்கப்பட்ட தத்துவத்தின் பேரிலும் அதியுத்தம தேசாதிபதியின் ஆக்ஞையின்படியும் இவ் விளம்பரத்தி னடியில் குறித்த தேதியிலிருந்து பன்னிரண்டு மாதங்களுக்குள்ளாக அக் காணி சொந்தக்காரரினால் அல்லது உருத்தாளிகளினால் உரித்து ஸ்தாபிக்கப்படாவிட்டால், மேற்படி கட்டளைச் சட்டத்தின் இரண்டாம் பிரிவின் பிரகாரம் அக்காணி அரசாட்சியாரால் திரும்பச் சுதந்தரமாக்கிக் கொள்ளப்படுமென்று விளம்பரப்படுத்தப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1924 ம் ஸ்ரீ செப்டெம்பர்மீ 11 ந் வ.

ஆர். என். தேயின்,
மேல்மாகாண அரசாட்சி ஏசண்டர்.

---

## 1912 ம் ஆண்டின் 8 ம் இலக்க மதுபானத்தீர்வைச் சட்டத்தின்கீழ் அறிவித்தல்.

### மதவாச்சியில் ஓர் சாராயத் தவறணை ஸ்தாபிப்பதைப்பற்றிய அறிவித்தல்.

இத்தால் சகலரு மறியவேண்டியது நுவரகாளாவிக் குறிச்சியைச்சேர்ந்த நுவரகம்பலாத்தை கடவத்கோறளை மதவாச்சிக் கிராமத்தில் 1925 ம் வருஷம் பங்குனி மாதம் 1 திகதி துவக்கம் ஓர் சாராயத் தவறணை ஸ்தாபிக்க உத்தேசிக்கப் பட்டிருக்கின்றது. அப்படித் தவறணை ஸ்தாபிப்பதைப்பற்றி 1924 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 14 திகதிவரைக்கும் எழுத்து மூலத்தில் யாதாயினும் விண்ணப்பத்தை நான் ஏற்றுக்கொள்வேன். மேலும் அத் திகதியில் மதவாச்சி வாடி வீட்டில் பின்னேரம் 1 மணி துவக்கம் 4 மணிக்கிடையில் எனக்குச் செய்யும் வாக்குமூல விண்ணப்பத்தை ஏற்றுக்கொள் வேன்.

அநுராசபுக் கச்சேரி,
1924 ம் ஆண்டு புரட்டாதிமீ 16 ந் வ.

ஏ. டபிள்யூ செய்மூர்,
வ. ம. மா. அரசாட்சி ஏசண்டர்.

---

## லோக்கல்போட் விளம்பரம்.

1898 ம் ஆண்டின் 13 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின் 8 ம் பிரிவுக்கமைந்த 1916 ம் ஆண்டின் 27 ம் இலக்கத்தின் கீழ்த் திருத்தப்பட்ட கட்டளைச்சட்டத்தின்படி ஆயத்தப்படுத்தப்பட்ட, சம்மதங்கொடுக்கத் தகுந்தவர்களினதும், தெரிவு செய்யப்படத் தகுந்தவர்களினதும் பெயர்கள் அடங்கிய டாப்புகள், கேகாலை லோக்கல்போட் கந்தோரில், கந்தோர் வேலைநடக்கும் நேரங்களில் சோதனைசெய்வதற்கு வெளியாய் வைக்கப்படுமென்றும் இதன்கீழ் கையொப்பம் வைப்பவர் சொல்லப்பட்ட டாப்புகளில் எப்பெயரையாவது கூட்டுவதற்குக் கொண்டுவரும் எல்லா உரித்துகளையும், கூட்டப்பட்டவர்களுக்கு மாறாகக் கொண்டுவரும் தடைகளையும் விசாரிக்கும் நோக்கமாக 1924 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 22 ந் தேதி காலை 10 மணிக்கு சொல்லப்பட்ட கந்தோரில் சமுகமா யிருப்பாரென்றும், இத்தால் விளம்பரஞ் செய்யப்படுகின்றது.

கேகாலை,
1924 ம் ஸ்ரீ புரட்டாதிமீ 25 ந் திகதி.

ஜே. ஆர். வோல்றோஸ்,
உதவி அரசாட்சி ஏசண்டர், கேகாலை.

---

## வழக்குப்புத்தகங்களை அழித்தலைப்பற்றிய அறிவித்தல்.

1894 வருஷம் 12 ம் இலக்கச் சட்டத்தின் 6 ம் பிரிவின்படி கொழும்பு றிக்குவெஸ்ற் கோட்டு 1911 ம் வருஷம் வைகாசிமீ 17 ந் திகதியிலிருந்து 1914 ம் வருஷம் ஆவணிமீ 14 ந் திகதிவரையுள்ள 23,178 ம் இலக்கத்திலிருந்து 40,647 ம் இலக்கம் வரையுள்ள பழமையானதும் பிரயோசனமற்றதுமான வழக்குப் புஸ்தகங்களை, மேற்படி சட்டம் 5 ம் பிரிவிற் சொல்லியதுக்கு உட்பட்டு இத் திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிந்ததின் பின்னால் அழிக்கப்படுமென்று இத்தா லறிவிக்கிறேன்.

மேற்படி வழக்குப் புஸ்தகங்களில் ஏதாவது எவருக்காவது தேவைப்படுமானால் அவைகளை அழிக்கப்படாதென்று தக்க காரணங்களுடன் நேரிலாவது பெருக்கோர் மூலமாவது முறைமையான பெட்டிசன் மூலமாயாவது எனக்குத் தெரிவிக்கப்படவேண்டும்.

கொழும்பு றிக்குவெஸ்ற் கோடு,
1924 ம் ஆ புரட்டாசிமீ 19 ந் வ.

ஸி. குமாரசாமி,
கொம்மிஷனர்.

---

## சுப்பிறீங்கோட்டு அறிவித்தல்.

இலங்கைத்தீவிற் சங்கைபொருந்த சுப்பிறீங்கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது: காலீ நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிறீங்கோட்டாரால் காலீ டிஸ்திறிக்டைச்சேர்ந்த 2 டாவது கிறிமினல் வழக்கு விசாரணை, 1924 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 13 ந் திகதியாகிய திங்கட்கிழமை காலமே 11 மணிதொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும்.

ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்க ளெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக் கடவர்கள்.

காலி பிஸ்கால் கந்தோர்,
1924 ம் ஸ்ரீ ஸப்டெம்பர்மீ 19 ந் வ.

இங்ஙனம்,
றீ. பீ. றஸல்,
பிஸ்கால்.

---

A. C. RICHARDS, ACTING GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.